**// தனி கவனம் மிகவும் அவசரம் //**

அனுப்புநர்

திரு.அ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்.
வேலூர் -9.

பெறுநர்

1. முதன்மை கல்வி அலுவலர், வேலூர்.
2. மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர், வேலூர்.
3. மாவட்ட கல்வி அலுவலர்கள், வேலூர் / திருப்பத்தூர் / இராணிப்பேட்டை / வாணியம்பாடி / அரக்கோணம்.
4. பதிவாளர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்காடு, வேலூர்.
5. முதல்வர், அரசு தொழிற்பயிற்சி கல்லூரி, வேலூர்.
6. வட்டார கல்வி அலுவலர்கள், வேலூர்.

**ந.க.எண்: என்.5/14852/2019 நாள்:28.11.2019**

அய்யா / அம்மையீர்,

பொருள்: சிறுபான்மையினர் நலம் - பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டம் 2019-2020 - ஆம் ஆண்டில் செயல்படுத்துதல் - NSP இணையதளம் மூலமாக விண்ணப்பித்த மாணவா/மாணவர்களின் விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்து (Download) இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க கோருவது – தொடர்பாக.

பார்வை:

1. புது தில்லி சிறுபான்மையினர் விவாகார அமைச்சகத்தின் இந்திய அரசின் செயலாளரின் நேர்முகக் கடித எண். 8-3 / 2019 - SS.
2. மத்திய அரசு கடித எண்.8-4/2019-SS, சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகம், புது தில்லி, நாள்: 17.07.2019.
3. சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.பி1/2761/2019, நாள்: 18.07.2019.
4. இவ்வலுவலக கடித எண். என்5/14852/2019 நாள் : 20.07.2019 மற்றும் 16.08.2019.
5. சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களின் நேர்முக கடித **எண்.பி1/267**1/2019, நாள்: 22.08.2019.
6. சென்னை சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் புலனம் செய்தி நாள்: 22.10.2019 மற்றும் 31.10.2019.

7. இவ்வலுவலக கடித எண். என்5/14852/2019
& 16.08.2019 மற்றும் 01.11.2019 & 26.11.2019.

8. சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களின்
நேர்முக கடித எண்.பி1/2671/2019, நாள்: 05.11.2019
மற்றும் புலனம் செய்தி நாள் : 13.11.2019.

******

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் 1 முதல் 12 வகுப்பு, வாழ்க்கை தொழிற்கல்வி (Vocational), ஐடிஐ, ஐடிசி, பாலிடெக்னிக், பட்டயப்படிப்புகள், இளங்கலை (ம) முதுகலை பட்டப்படிப்புகள், பொறியியல் மற்றும் மருத்துவம், எம்பில், ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றை பயிலும் கிருத்துவர் / இஸ்லாமியர் / புத்த மதத்தினர் / சீக்கியர் / ஜைன் மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு கீழ்கண்டவாறு கல்வி *உதவித்தொகை திட்டத்தின் கீழ் தேசிய கல்வி உதவித்தொகை இணையம்* **{National Scholarship Portal)** **www.scholarships.gov.in** வாயிலாக மத்திய அரசின் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் நடப்பாண்டிற்கான பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை கடந்த 31.10.2019 வரை நிறைவுற்றது. பார்வை 6-ல் காணும் சென்னை சிறுபான்மையினர் நல இயக்குநரகத்தில் இருந்து வரப்பெற்ற புலனச்செய்தியில் 15.11.2019 வரை சிறுபான்மையினர் நல கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டதினை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் பார்வை 8-ல் காணும் சென்னை சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மற்றும் கல்வி நிலையங்கள் விண்ணப்பங்களை சரிபார்க்க கீழ்காண்டவாறு கால நிர்ணயம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கல்வி நிலையங்கள் மாணவ / மாணவியர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை சரிபார்க்க கடைசி நாள் | 30.11.2019 |

மேலும் தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தின் மூலம் (National Scholarship Portal) **www.scholarships.gov.in**–ல் வேலூர் மாவட்டத்தில் இதுவரை விண்ணப்பித்த மாணவர்களின் மொத்த விண்ணப்பங்கள் 32986 இதில் 2795 இதுவரை பரிந்துரைக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மேலும் சம்மந்தப்பட்ட பள்ளி / கல்லூரி நிறுவனங்கள் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை பதிவிறக்கம் **(Download)** செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மயனிர் நல அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

எனவே நாளது தேதி வரை விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 30% விண்ணப்பங்கள் மட்டுமே இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மாநில அளவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. **கல்வி நிலையங்களால் சரிப்பார்க்கப்படாடமல் உள்ளது 2795 (Institute Level Verification) மாணவ/மாணவியர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களுக்கான கல்வி உதவித்தொகை பெற இயலாது நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது**. மேலும் மாவட்ட அளவிற்கு பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கபடவில்லை எனில் மாநில அளவிற்கு பரிந்துரை செய்ய இயலாது என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, இப்பொருள் தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து கல்வி அலுவலர்களுக்கும் கனிவுடன் அறிவுத்தப்படுகிறது. **இது மிக மிக அவசரம்.**

28/11/19

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர்நல அலுவலர்(பொ), மற்றும்
தனித்துணை ஆட்சியர் முத்திரை கட்டணம்,
வேலூர் -9.

நகல்:- இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை.
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

28/11/19